பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 09 2026 THURSDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுகாதார சேவைகளை வழங்குவதில் இந்தியா சிறந்து விளங்குவதாக உலக சுகாதார அமைப்பு பாராட்டு தெரிவித்துள்ளது.

2. மகளிர் தொழில் முனைவோருக்கு கூடுதல் வாய்ப்புகள் கிடைப்பதை பிரிக்ஸ் நாடுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3. தமிழகத்தில் இரண்டு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பாளர்களை த.வெ.க. அறிவித்துள்ளது.

4. ஈரானின் அணுசக்தி செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளுமாறு சர்வதேச அணுசக்தி முகமை, ஐ.நா பாதுகாப்பு குழுமத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

5. உலக பாரா துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<

சுகாதார சேவைகளை வழங்குவதில் இந்தியா சிறந்து விளங்குவதாக உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் டாக்டர் Tedros Adhanom Ghebreyesus கூறியுள்ளார்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டாவை புதுதில்லியில் சந்தித்து பேசிய பின்னர் சமூகவலைதளத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தாய் சேய் நலனிலும், நோய்த் தடுப்பு நடவடிக்கைளிலும் இந்தியாவின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் நாடுமுழுவதும் ஒரு லட்சத்து 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நல்வாழ்வு மையங்கள் செயல்பட்டு வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தடுப்பூசி செலுத்தும் இயக்கமும் பெரிய அளவில் வெற்றிபெற்றுள்ளதாக டாக்டர் Tedros Adhanom Ghebreyesus கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

அரசுமுறைப் பயணமாக இலங்கை சென்றுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், அந்நாட்டு பிரதமர் டாக்டர் Harini Amarasuriya-வை சந்தித்து பேசினார்.

கொழும்பில் நடைபெற்ற இந்த சந்திப்பின் போது, இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இலங்கையின் அமைதி மற்றும் வளத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா வழங்கும் என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

மகளிர் சக்திக்கு எடுத்துக்காட்டாக இலங்கை பிரதமர் விளங்குவதாகவும் அவர் புகழாரம் சூட்டினார்.

இலங்கையில் உள்ள பெண்கள் இந்தியா வழங்கும் திட்டங்களின் கீழ் அதிக அளவில் பயன்பெற வேண்டும் என்பது தமது விருப்பம் என்றும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மகளிர் தொழில் முனைவோருக்கு கூடுதல் வாய்ப்புகள் கிடைப்பதை பிரிக்ஸ் நாடுகள் உறுதி செய்ய வேண்டும் என்று மத்திய தொழில் மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கேட்டுக் கொண்டுள்ளார்

புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

நிதி, கல்வி மற்றும் திறன் பயிற்சி மூலம் மகளிர் மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தொழில் தொடங்க முன்வரும் மகளிருக்கு பிணையில்லா கடனுதவி வழங்க வேண்டும் என்றும் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

விவசாயிகளின் நலனை கருத்தில்கொண்டு புதிய விதைச்சட்டத்தை கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

போலி விதை பயன்பாட்டை தடுக்கும் வகையில், இந்த சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக வேளாண் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதுதொடர்பாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், விவசாய சங்க பிரதிநிதிகளுடன் இன்று ஆலோசனை நடத்த உள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கஷ்மீர் தொடங்கி கன்னியாகுமரி வரையுள்ள விவசாயிகளிடம் கருத்துகளை கோரும் வகையில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக மத்திய அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், மாற்று எரிசக்தி உற்பத்தி அதிகரித்து வருவதாக கூறி, புள்ளி விவரங்களுடன் அவற்றை பட்டியலிட்டுள்ளார்.

காற்றாலை மற்றும் சூரியசக்தி மின்உற்பத்திக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

குஜராத்தில் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வந்த கட்டிடத்தில், இரும்பு பரண் இடிந்து விழுந்த விபத்தில் 12 பேர் காயமடைந்தனர்.

அஹமதாபாத் அருகே நேரிட்ட இந்த விபத்தில், இடிபாடுகளுக்கிடையே சிக்கிய 15 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக அம்மாநில துணை முதலமைச்சர் திரு. ஹர்ஸ் சங்வி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இவர்களில் 12 பேர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

இதற்கிடையே, இந்த விபத்து குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, அம்மாநில முதலமைச்சரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டறிந்தார்.

>>>>>>><<<<<<<

பிரிக்ஸ் உச்சிமாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து, தில்லி காவல்துறை ஆணையர் திரு. Anurag Kumar தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு பகுதியாக துக்ளக் சாலை காவல்நிலையத்தில் கண்காணிப்பு கேமிராக்களுக்கான கட்டுப்பாட்டு அறையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பிரிக்ஸ் உச்சி மாநாடு வரும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

>>>>>>><<<<<<<

தமிழகத்தில் இரண்டு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்பாளர்களை த.வெ.க. அறிவித்துள்ளது.

இதன்படி, த.வெ.க தலைமையிலான மதச்சார்பற்ற சமூகநீதி வெற்றிக் கூட்டணி சார்பில், மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் திருமதி. மரகதம் குமரவேலும், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் திருமதி. சத்யபாமாவும் போட்டியிடுகின்றனர்.

இந்த இரண்டு தொகுதிகளிலும் அஇஅதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர்கள், தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க-வில் இணைந்ததை அடுத்து இந்த இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

>>>>>>><<<<<<<

ஆந்திராவின் ரயில் வளர்ச்சி திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், இதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கும், ரயில்வே அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவிற்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாக கூறியுள்ளார்.

ரேணிகுண்டா - அரக்கோணம் இடையே 3வது மற்றும் 4வது வழித்தடம் அமைக்கும் திட்டங்கள் மூலம், திருப்பதி மற்றும் சித்தூர் மாவட்டங்கள் பெரி அளவில் பயனடையும் என்று திரு. சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

மகளிர் மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர்முன்னுரிமை அளித்துள்ளதாக உத்தரபிரதேச துணை முதலமைச்சர் திரு. கேசவ் பிரசாத் மௌரியா கூறியுள்ளார்.

லக்னோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உத்தரபிரதேச அரசும் மகளிர் நலனில் அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு வட்டியில்லாமல் ஒரு லட்சம் ரூபாய் வரை கடனுதவி வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மகளிர் நலனில் அக்கறையின்றி செயல்படுவதாகவும் திரு. கேசவ் பிரசாத் மௌரியா குற்றம் சாட்டினார்.

>>>>>>><<<<<<<

மத்தியப்பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக திரு. Alpesh Yeshvant Kogje இன்று பதவியேற்றுக் கொண்டார்.

போபாலில் உள்ள மக்கள் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அம்மாநில ஆளுநர் திரு. Mangubhai Chhaganbhai Patel அவருக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

மிஸோரமில் நீர்வளத்துறையை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அம்மாநில முதலமைச்சர் திரு. Lalduhoma அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

Aizawl-ல் இதுதொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டு அவர் பேசினார்.

இந்த துறையில் பணியாளர் பற்றாக்குறையை களைய உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் முதலமைச்சர் இக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

ஈரானின் அணுசக்தி செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளுமாறு சர்வதேச அணுசக்தி முகமை, ஐ.நா பாதுகாப்பு குழுமத்திற்கு பரிந்துரைத்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் முதன்முறையாக சர்வதேச அணுசக்தி முகமை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இந்த முகமையின் 35 பேர் கொண்ட வாரிய கூட்டத்தில் இந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 23 வாக்குகள் பதிவாகின.

ரஷ்யா, சீனா மற்றும் Niger நாடுகள் இந்த தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தன.

8 நாடுகள் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

அமெரிக்கா கொண்டு வந்த இந்த தீர்மானத்திற்கு இங்கிலாந்து, ஃபிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்தன.

>>>>>>><<<<<<<

உலக பாரா துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

கொரியாவின் Chongwon-ல் இன்று தொடங்கிய இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில், Mona Agarwal வெள்ளிப்பதக்கத்தையும், Avani Lekhara வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதன்மூலம் 2028ஆம் ஆண்டு லாஸ்ஏஞ்சல்ஸில் நடைபெறவுள்ள பாராலிம்பிக் போட்டியில் பங்கேற்க Mona Agarwal தகுதி பெற்றுள்ளார்.

>>>>>>><<<<<<<

ஆசிய கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா 19-0 என்ற கோல்கணக்கில் பாகிஸ்தானை வென்றது.

>>>>>>><<<<<<<

15 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Hamsani Chadaram காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 10-15, 15-12, 15-7 என்ற செட்கணக்கில் சீனாவின் Man Lin Li-யை வென்றார்.

>>>>>>><<<<<<<

வியட்நாம் ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் விமல்ராஜ் அண்ணாதுரை - ஸ்ரேயா பாலாஜி இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு, காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 21-15, 24-22 என்ற செட்கணக்கில் இந்தியாவின் சாத்விக் ரெட்டி - ராதிகா சர்மா இணையை வென்றது.

>>>>>>>END<<<<<<<